முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை – திருமதி பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை
திருவள்ளுராண்டு 2057, பராபவ வருடம், சித்திரை மாதம் 03–ம் நாள்
2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ஆம் நாள் வியாழக்கிழமை
CNR.No.TNMY03-000977-2023
**அசல் வழக்கு எண்.211/2023**

லதா ... வாதி

/எதிர்/

1. முருகானந்தம்,
2. ஆசைத்தம்பி,
3. உதவி பொறியாளர் அவர்கள்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும்,
பகிர்மான கழகம், மணல்மேடு. ... பிரதிவாதிகள்

வாதிக்காக வழக்கறிஞர் திரு.V. தியாகராஜன், அவர்களும், 1ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திருமதி.S.மஞ்சுளா, அவர்களும், 2ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. G.ஜெகதராஜ், அவர்களும், 3ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.கே.டி. தணிகை பழனி அவர்களும், ஆஜராகிய நிலையில் Written Statement தாக்கல் செய்யாத காரணத்தினால் D3 தோன்றாதரப்பிராக்கப்பட்டும், 16.04.2026 அன்று வாதி தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்ததின் பேரில் இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

தீர்ப்புரை

தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாக வீதம் கிடைக்க கூடியது என விளம்பல் பரிகாரம் அளித்து முதல்நிலை தீர்ப்பாணை வழங்கும் படிக்கும், தாவா சொத்துக்களில் வாதிக்கு முதல்நிலை தீர்ப்பாணை உத்தரவு பிரகாரம் வாதிக்குரிய பாகம் பிரித்து கொடுக்க வேண்டியதன் பொருட்டு முதல் நிலை தீர்ப்பாணையினை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை கோரி வாதி மனு செய்து அதனடிப்படையில் வழக்கறிஞர்/ஆணையம் நியமனம் செய்து வாதிக்குரிய பாக விகிதம் நல் இளப்பம் சரிகட்டி பிரித்து கொடுக்க ஓர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கும் படிக்கும். கூட்டு குடும்ப சொத்தில் 2ம் பிரதிவாதியால் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 3ம் பிரதிவாதியால் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பினை உடனடியாக துண்டிப்பு செய்திட உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும், வழக்கு செலவு தொகையினை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்தி வைக்க கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

PW1 absent. Memo filed by plaintiff side and stating that the case is Settled Out of Court. Hence this suit is dismissed as Settled Out of Court. Court fee to be refunded in accordance with law.

இந்த தீர்ப்பு என்னால் இன்று (16.04.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–திருமதி.P.சுதா)
முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

முதன்மை சார்பு நீதிமன்றம்,
மயிலாடுதுறை.
வரைவு / நேரிய தீர்ப்பு
OS. No.211/2023
நாள்.16.04.2026